

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம் கட்டுமானப் பணிகளை 09.10.2024 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். அருகில் அரசு கூடுதல் தலைமைச் செயலர் மங்கத்ராம் சர்மா, அரசு செயலர் (நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை) மரு.ஆர்.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, முதன்மை தலைமைப் பொறியாளர் (மதுரை மண்டலம்) செல்வராஜ், கண்காணிப்புப் பொறியாளர் (மதுரை மண்டலம்) அய்யாக்கண்ணு, செயற்பொறியாளர் தங்கவேல், இணை இயக்குநர்சுகாதார நலப்பணிகள்) மரு.பூமிநாதன் உட்பட பலர் உள்ளனர்.

### பழனி , ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை, ஆத்தூர்

# கூட்டுறவு கலை - அறிவியல் கல்லூரி புதிய கட்டட கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர்கள் இ.பெரியசாமி – எ.வ.வேலு – அர.சக்கரபாணி பார்வையிட்டு ஆய்வு!

திண்டுக்கல், அக்.12-

பழனி, ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை புதிய கட்டுமான பணிகள், ஆத்துார் கூட்டுறவு கலை மற்றும்அறிவியல் கல்லூரி புதிய கட்டடம் கட்டுமான பணிகளை அமைச்சர்கள் இ.பெரியசாமி எ.வ.வேலு ,அர.சக்கரபாணிஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

ஆய்வின்போது, பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறார்கள். பொதுமக்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவக் கட்டமைப்புகளை மேம்படுத்த பல்வேறு திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் திண்டுக்கல் மாவட்டத்தில் மருத்துவமனைகளில் மருத்துவ கட்டமைப்புகளை மேம்படுத்த பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுப்பணியின் துறையின் சார்பில் திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் தொகுதியில் கலைக்கல்லூரி, பழனியில் மாவட்ட மருத்துவமனை, ஒட்டன்சத்திரத்தில் தாலுகா மருத்துவமனை, கொடைக்கானலில் மருத்துவமனை கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

பழனி ஆன்மீக தலமாக இருக்கிறது. பழனியில் தாலுகா மருத்துவமனைதான் இருந்தது. இம்மருத்துவமனையினை தரம் உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் ரூ.70 கோடி மதிப்பீட்டில் நிதி மற்றும் 6.80 ஏக்கர் பரப்பளவு நிலம் ஒதுக்கப்பட்டு, 1,81,000 சதுர அடியில் கட்டடம் கட்டப்படுகிறது. பழனியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.70.00 கோடி மதிப்பீட்டில் மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெளிநோயாளிகள், உள்நோயாளிகள் பிரிவு, மகப்பேரியியல் மற்றும் பச்சிளம் குழந்தைகள் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, பிரேத பரிசோதனைக் கூடம் ஆகியவை கட்டப்பட்டு வருகின்றன.

வெளிநோயாளிகள், உள்நோயாளிகள் பிரிவு கட்டடத்தில் தரைதளத்தில் புறநோயாளிகளுக்கான ஆலோசனை அறைகள், உடலியக்க மருத்துவம், உறைவிட மருத்துவர் அறை, மருந்தகம், முதல் தளத்தில் பல் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை பகுதி, குழந்தைகள் மருத்துவ பகுதி, இரண்டாம் தளத்தில் ஆண்கள் மருத்துவ பகுதி, மூன்றாவது தளத்தில் பெண்கள் மருத்துவ பகுதி, நான்காவது தளத்தில் எலும்பியல் பகுதி, மனநோயாளிகள் பகுதி, குழந்தை மருத்துவ பகுதி, ஐந்தாவது தளத்தில் சிறப்பு சிகிச்சை, ஆறாவது தளத்தில் கூட்ட அரங்கம், சிற்றுண்டி கூடம், நூலகம் மற்றும் அனைத்து தளங்களிலும் மருத்துவர் மற்றும் செவிலியர் அறைகள் அமைக்கப்படுகின்றன.

மகப்பேறியியல் மற்றும் பச்சிளம் குழந்தைகள் பிரிவு 5 தளங்களுடன் அனைத்து மருத்துவ வசதிகளுடனும், 2 மருத்துவ சிகிச்சை பகுதி கட்டடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், கட்டடம் முழுவதும் ஆக்சிஜன் குழாய் வசதி மற்றும் தீயணைப்பு வசதிகள், கழிப்பறைகள் உட்பட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் 50 படுக்கை வசதிகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம் ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. தரைதளத்தில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, அதிதீவிர விபத்து சிகிச்சை பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, இ.சி.ஜி. எக்கோ போன்ற வசதிகளும், முதல் தளத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவு, தாய் சேய் நலப்பிரிவு, இரண்டாவது தளத்தில் அறுவை அரங்கம், அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்பு பகுதி(ஆண்கள்), மூன்றாவது தளத்தில் அறுவை அரங்கம்(எலும்பியல்), அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்பு பகுதி(பெண்கள்), நான்காவது தளத்தில் நிருவாகப் பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி, ஆய்வகம் ஆகிய வசதிகளும் மற்றும் கட்டடம் முழுவதும் தீயணைப்பு கருவிகள், ஆக்சிஜன் குழாய் வசதி, குடிநீர் வசதிக்காக கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க த் தொட்டிகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், பிரேத பரிசோதனைக்கூடம், குளிரூட்டப்பட்ட பெட்டி, காவலர் அறை, உபகரணங்கள் அறை, கழிப்பறை வசதிகளுடன் மருத்துவமனை கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆத்துார் வட்டம், சீவல்சரகு கிராமத்தில் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் ரூ.75.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. கட்டுமான பணி 24.02.2023 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இரண்டு தளங்கள் கொண்ட கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடம் 15940 சதுர மீட்டர் பரப்பளவில் வடிவமைக்கபட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

தரைதளத்தில் மாணவ, மாணவிகளுக்கான 29 வகுப்பறைகள், வேதியியல் மற்றும் கணினி அறிவியல் ஆய்வகம், நிர்வாகப்பிரிவு, நூலகம், 600 இருக்கை வசதிகள் கொண்ட குளிரூட்ட ப்பட்ட கலைரங்கம், திறந்தவெளி கலைரங்கம் ஆகியவையும், முதல் தளத்தில் மாணவ, மாணவிகளுக்கான 31 வகுப்பறைகள், இயற்பியல், விலங்கியல் மற்றும் கணினி அறிவியல் ஆய்வகம், நிர்வாகப்பிரிவு, நூலகம், குடிநீர் வசதிக்காக கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்த்தொட்டிகள், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், கட்டடம் முழுவதும் தீயணைப்பு கருவிகள் ஆகிய வசதிகளுடன் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டுமான பணிகள் முழுமையாக 31.12.2024ஆம் தேதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டு, பணிகள் மேற்கொள்ள ப்பட்டு வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் பல்வேறு வசதிகளுடன் கூடிய கல்லூரிகள் இருந்த போதிலும், இன்றைய நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி இக்கல்லூரி அமைக்க வேண்டுமென்று பொதுப்பணித்துறையின் சார்பில் பணிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது.

பணிகளை தரமாகவும், விரைந்து முடிக்கவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

அரசு கூடுதல் தலைமைச் செயலர் மங்கத்ராம் சர்மா, அரசு செயலர்(நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை) மரு.ஆர்.செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில் குமார், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், மதுரை (வடக்கு) சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி

மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் மு.பாஸ்கரன், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ச.ராஜப்பா, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ். முதன்மை தலைமைப் பொறியாளர்(மதுரை மண்டலம்) .செல்வராஜன், கண்காணிப்புப் பொறியாளர் (மதுரை மண்டலம்) .அய்யாக்கண்ணு, செயற்பொறியாளர்தங்கவேல், இணை இயக்குநர்(சுகாதார நலப்பணிகள்) மரு.இரா.பூமி நாதன், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர், கோ.காந்திநாதன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனர் திருமதி சுபாஷினி, பழனி நகர்மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, துணைத்தலைவர் கந்தசாமி, ஒட்டன்சத்திரம் நகர்மன்ற தலைவர் க.திருமலைச்சாமி, துணைத்தலைவர் .ப.வெள்ளைச்சாமி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், மருத்துப் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



சென்னை, கலைவாணர் அரங்கில், நேற்று முன்தினம் (10.10.2024) தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில், எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய் தொற்று குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, தலைமையில் உறுதி மொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குநர் திருமதி.ஆர்.சீதாலட்சுமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.மணி, சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.லியோ டேவிட், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (சுகாதாரம்) மரு.சாந்தகுமாரி, சென்னை மாநகராட்சி நலஅலுவலர் மரு.ஜெகதீசன், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உயரலுவலர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### சுதந்திரப் போராட்ட வீரர்கள் - மொழிப்போர்த் தியாகிகள்-

# தமிழறிஞர்களுக்கு கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, அக். 12 -

நாட்டின் விடு தலைக்காக அரும்பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள், தமிழ் மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாட்டிற்கு பெருந்தொண்டாற்றிய தமிழறிஞர்கள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் மற்றும் விருதாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், தமிழ்நாடு முழுவதும் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு, பேருந்துகளில் பயணம் மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்நிலையில், 60 வயதுக்கு மேற்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகள், தமிழ் மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாட்டிற்கு பெருந்தொண்டாற்றிய தமிழறிஞர்கள் உள்ளிட்டோர் வயது முதிர்வு காரணமாக, தனியாக பேருந்தில் பயணம் செய்திட இயலாத நிலையில், உடன் பயணிக்கும் உதவியாளருக்கும் பேருந்துகளில் கட்டணமில்லா பயண சலுகைகள் குறித்து 2010, 2020 மற்றும் 2023ம் ஆண்டுகளில் அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 01.06.2024 முதல் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் கட்டணமில்லா பயண சலுகை இணையதளம் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை முறையாக நடத்துநர்கள் பின்பற்றவில்லை எனத் தெரிய வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப் போர் தியாகிகள், தமிழ் மொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாட்டிற்கு பெருந்தொண்டாற்றிய தமிழறிஞர்கள் உள்ளிட்டோர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள காரணத்தால், இனிவரும் காலங்களில் பயனாளிகள் எவ்வித சிரமமின்றி, பேருந்தில் பயணம் மேற்கொள்ளும் வகையில் அனைத்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்களுக்கும், உயர் அலுவலர்களுக்கும் மற்றும் ஓட்டுநர் / நடத்துநர்கள் உள்ளிட்டனை வருக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில், பயனாளிகள் எவ்வித சிரமமின்றி, பேருந்தில் பயணம் மேற்கொள்ளலாம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

# சிவகங்கையில் சுதந்திரப் போராட்ட முதல் பெண் போராளி குயிலி சிலை திறப்பு!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மரியாதை!

சிவகங்கை, அக். 12-

சிவகங்கையை தலைநகராக ஆட்சிபுரிந்த அரசி ராணி வீரமங்கை வேலுநாச்சியார். இவர் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காக தமிழகத்தில் இருந்து முதலாவதாக குரல் கொடுத்த பெண்அரசி ஆவார். இவரது படைத்தளபதியில் இருந்த குயிலி ஆங்கிலேயரை எதிர்த்து ஆங்கிலேயர்களின் நவீன ஆயுதக்கிடங்கில் உடல் முழுவதும் தீப்பற்றி ஆயுதக்கிடங்கினை அழித்தார். தன் உயிரையும் மாய்த்துக் கொண்டார். இந்தியாவில் இவர் முதல் பெண் போராளி என்று பாராட்டப்பட்டார். அத்தகைய பெண் போராளி குயிலுக்கு சிலை அமைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது. அதை ஏற்று சென்ற ஆண்டு ஜனவரியில் சட்டமன்ற கூட்டத்தொடரில் தமிழக முதல்வர் அவர்கள் சுதந்திர போராட்ட பெண் போராளி குயிலிக்கு ரூபாய் 50 லட்சம் மதிப்பில் வெண்கலச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்தார். அதனை ஒட்டி சிவகங்கை காளையார்கோவில் சாலையில் உள்ள வேலுநாச்சியார் நினைவு மண்டபத்தில் குயிலியின் சிலை அமைக்கப்பட்டு வந்தது. அத்தகைய சிலையை நேற்று முன்தினம் 9ம் தேதி முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொளிக் காட்சி மூலம் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சிவகங்கையில் ராணி வேலுநாச்சியார் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள குயிலியின் சிலைக்கு முதலாவதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதை தொடர்ந்து எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷி அஜித் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# முரசொலி செல்வத்தின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி!

## செஞ்சியில் தி.மு.க.வினர் மலர் தூவி மரியாதை!

செஞ்சி அக் 12-

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மனசாட்சியாக திகழ்ந்தவரும் கலைஞரின் மருமகனும் முரசொலி நாளிதழ் ஆசிரியருமான முரசொலி செல்வம் அவர்கள் நேற்று பெங்களூரில்மாரடைப்பால் உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து அவரது உடல் சென்னை கோபாலபுரத்தில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. மாரடைப்பால் உயிரிழந்த முரசொலி நாளிதழின் ஆசிரியர் முரசொலி செல்வத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் தி.மு.க. நிர்வாகிகள் புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் நடைபெற்றது.

செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி நாளிதழ் ஆசிரியர் முரசொலி செல்வத்தின் திருவுருவபடத்திற்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினர்.

இதில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாநில பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர பொருளாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற கவுன்சிலர் மகாலட்சுமி கமலநாதன்,மாவட்ட பிரதிநிதி ஜே. எஸ். சர்தார், மாவட்ட ஆதிதிராளர் நல அணி துணை அமைப்பாளர் சேகர்,செஞ்சி ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் பெருங்காப்பூர் ராஜேந்திரன், அரசு ஒப்பந்ததாரர் கௌஸ் பாஷா,நிர்வாகிகள் ஆதி, பன்னீர்,சக்திவேல், கமலக்கண்ணன், தொண்டரணி பாஷா, வழக்கறிஞர் பழனி, பஸ்ஸ்டாண்ட் செல்லன், சார்லஸ், ஆலபூண்டி ஊராட்சி மன்ற தலைவர் முத்தம்மாள் சேகர்உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் மறைந்த முரசொலி செல்வத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினர்.



சென்னை சேப்பாக்கம் ஆதிதிராவிடர் நல இயக்குநர் கூட்டரங்கில் நேற்று முன்தினம் (10.10.2024) ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தலைமையில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்ட பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் தலைவர் உ. மதிவாணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அணவயல் எல்.என். புரம் அரசு மேல்நிலைப்பள்ளியில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (10.10.2024) வழங்கினார். உடன் அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் (பொ) திருமதி.கே.ஜெயந்தி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.